17-03-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 12.12.1998

எனது எனது என்ற தேக அபிமானத்தை விடுத்து பிரம்மா பாபாவின் ஒவ்வொரு அடியையும் பின்பற்றி நடக்கவும்

இன்று பாப்தாதா தனது நாலாபுறத்தில் உள்ள சிரேஷ்ட ஆத்மாக்களைப் பார்த்துக்கொண்டே யிருக்கின்றார். பிராமணன் என்றால் பிரம்மா முகவம்சாவளி. ஒவ்வொரு பிராமண ஆத்மாக்களின் பாக்கியத்தைப் பார்த்து பாப்தாதாவே புன்சிரிப்பு சிரிக்கின்றார். ஒவ்வொரு பிராமண ஆத்மாக் களுக்கும் பிறவியிலேயே பிரம்மா பாபா மூலம் நினைவிற்கான திலகம் வைக்கப்படுகின்றது. பகவான் தானே திலகதாரியாக ஆக்கின்றார். கூடவே ஒவ்வொரு பிராமண ஆத்மாக்களை தூய்மைக்கான மகாமந்திரத்தின் மூலம் ஒளியின் கிரிடத்தை அணிவிக்கின்றார். மேலும் கூடகூடவே ஒவ்வொரு பிராமண ஆத்மாக்களை விஷ்வ கல்யாணகாரி ஆத்மாவாக ஆக்கி பொறுப்பு என்ற கிரிடத்தையும் அணிவிக்கினறார். இரட்டை கிரிடம் மற்றும் சுயம் பகவானே தனது இதய சிம்மாசனதாரியாக ஆக்குகின்றார். எனவே பிறவி எடுத்ததுமே திலகம், கிரீடம் மற்றும் சிம்மாசனதாரியாக ஆகிவிடுகிறோம். இப்படிப்பட்ட உயர்ந்த பாக்கியம் முழு கல்பத்திலும் எந்த ஆத்மாவுக்கும் இருக்க முடியாது. எனவே இத்தனை உயர்ந்த பாக்கியங்கள் நினைவில் உள்ளனவா? அதாவது நாம் பிராமணர்கள் பிறவியிலேயே அப்படிப்பட்ட பாக்கியவான் ஆகி விட்டோமா? பிராமணர்கள் நமது அடையாளத்தை உலகத்தார்கள் ஸ்ரீகிருஷ்ணரின் உருவில் காட்டி விட்டார்கள். ஆனால் அவர் உலகத்தின் இராஜகுமாரர் ஆகையால் இராஜ்ஜியத்தின் நினைவார்த் தமாக திலகம், கிரிடம் மற்றும் சிம்மாசனம் கொடுக்கின்றார்கள். தந்தை பரமாத்மா மூலம் இந்த மூன்று பிராப்திகளும் அடைந்திருப்பது என்பது பிராமணர்களின் பிராப்தியில் மட்டுமே உள்ளன. எனது குழந்தைகளுக்கு எத்தனை பெரிய பாக்கிய நட்சத்திரம், ஒவ்வொருவரின் நெற்றியில் ஜொலித்துக்கொண்டுள்ளது என்பதை பாப்தாதா பார்த்துக்கொண்டுள்ளார். அப்படிப்பட்ட பாக்கிய நட்சத்திரம் தனக்கு தானே தென்படுகின்றதா? சதா ஒளிர்வதாக தென்படுகின்றதா? அல்லது எப்பொழுதாவது மிகவும் நன்றாக ஜொலிக்கின்றது அல்லது சிலநேரம் ஜொலிப்பது குறைவாக உள்ளதா? இந்த பாக்கயத்தின் நட்சத்திரம் விசித்திரமான நட்சத்திரமாகும். எனவே பாப்தாதா குழந்தைகளாகிய உங்களை பார்க்கும்பொழுதெல்லாம், சந்திக்கும் பொழுதெல்லாம், ஒவ்வொரு வரின் நெற்றியில் நட்சத்திரம் ஜொலிப்பதை பார்த்து புன்முறுவல் பூக்கின்றார். ஜொலித்துக் கொண்டேயிருக்கும் பொழுது ஏன் ஜொலிப்பு குறைந்து போகின்றது? அதற்கான காரணத்தை நீங்கள் அனைவரும் நல்ல விதமாக அறிந்துள்ளீர்கள்.

பாப்தாதாவிற்கு குழந்தைகளின் சார்ட்டைப் பார்த்து புன்சிரிப்பும் வருகின்றது, மற்றவர்களிடம் என்னவாக வேண்டும் கேட்டதுண்டா? இலட்சியம் என்ன? அதிக பட்சமாக நம்பர் ஒன் ஆக வேண்டும் என்ற ஒரே பதில் தான் இருக்கும், சூரிய வம்சியாக வேண்டும். சந்திரவம்சி இராஜா இராம் சீதை கூட ஆக விரும்புவதில்லை, ஏனெனில் இலட்சியம் சூரியவம்சி நம்பர் ஒன்னிற் கானதாக

இருப்பதால், எப்படி இலட்சியமோ அப்படி இலட்சணம் சதா சூரிய வம்சிக்கானது தென்பட வேண்டியது அவசியம். சூரியனின் ஒளியின் நிலை (கலை) கூடுவதோ அல்லது குறைவதோ கிடையாது, உதயமாகும் மற்றும் அஸ்தம் (மறையும்) ஆகும், ஆனால் சந்திரன் போன்று கலைகள் குறைவதிலலை, சூரிய வம்சத்தின் அடையாளம் - சதா ஏக்ரஸ் மற்றும் சதா விஜயி (வெற்றி). சந்திரவம்சத்தை சத்திரிய வம்சம் எனக் கூறப்படுகின்றது, சத்திரிய வாழ்க்கையில் எப்பொழுதாவது தோல்வி எப்பொழுதாவது வெற்றி ஏற்படும், ஒருசமயம் வெற்றி மூரத், ஒரு சமயம் உழைப்பின் மூரத். யுத்தம் செய்வது என்றால் உழைப்பதாகும். சந்திரவம்சத்தின் கலைகள் ஒரு நிலையாக (ஏக்ரஸ்) இருப்பதில்லை, எனவே இலட்சியம் மற்றும் இலட்சணத்தை சமமாக ஆக்குங்கள். எப்படி பாப்சமமாக ஆகவேண்டும் என்ற இலட்சியம் வைத்துள்ளீர்கள், ஒவ்வொரு குழந்தைகளும் நம்பர் ஒன் ஆகவேண்டும் என்று தான் கூறுகின்றார்கள். எனவே தந்தை சதா சகஜ வெற்றி சொரூபம். ஒருவேளை ஏக்ரஸ் நிலை இல்லை எனில் நம்பர் ஒன் ஆகிவிடுவீர்களா என்ன? இல்லையென்றால் நம்பர் வார் ஆகிவிடுவீர்களா? ஒன்று நம்பர் ஒன், இரண்டாவது நம்பர் வார் (வரிசைகிரமம்).. நான் நம்பர் ஒன்னான அல்லது நம்பர்வாரின் பட்டியலில் உள்ளனோ? எனத் தன்னைத்தானே கேட்டுக்கொள்ளுங்கள். நம்பர் ஒன் என்றால் தந்தையைப் பின்பற்றுவதாகும். பாப்தாதா சகஜமான சாதனம் கூறுகிறார் - பின்பற்றுவதில் உழைப்பு குறைவாக இருக்கும். பிரம்மா பாபாவின் அடிமீது அடி வைப்பது, ஒவ்வொரு காரியத்தின் அடி என்பது கால் தடத்தின் அடையாள மாகும். கால் தடத்தின் மீது கால் வைப்பது எளிமையானது. புதிய வழியை தேடாதீர்கள், அடிமீது அடி என்றால் தடம் மீது தடம் வைப்பதாகும். எந்தக் காரியம் செய்தாலும், அது மனதின் சங்கல்பமாக இருந்தாலும், வார்த்தை பேசினாலும். கர்மத்தில் சம்பந்தம் தொடர்பில் வந்தாலும், ஒவ்வொரு காரியம் செய்வதற்கு முதலில் இதை யோசியுங்கள் - பிராமண ஆத்மா நான் என்ன காரியம் செய்து கொண்டிருக்கின்றேனோ அது பிரம்மா பாபாவிற்கு சமமாக உள்ளதா? பிரம்மா பாபாவின் சங்கல்பம் என்னவாக இருந்தது? எனது சங்கல்பமும் அந்த அடிப்படையில் இருந்ததா? ஒவ்வொரு வார்த்தையும் பிரம்மா சமமாக இருந்ததா? ஒருவேளை அவ்வாறு இல்லை என்றால் அதைச் செய்யத் தேவையில்லை. யோசிக்க வேண்டாம். பேசவேண்டாம். செய்யவேண்டாம். பிரம்மா பாபாவின் அடி ஒன்று, குழந்தைகளின் அடி வேறொன்று என்றால் பாபாவுக்கு சமமாவது என்ற இலட்சியம் எதுவோ, இலக்கு எதுவோ, அது எப்படி நிறைவேறும்? பிரம்மாவின் ஒவ்வொரு அடிமீது அடிவைத்து பின்பற்றிச் சென்றால் ஒன்று தன்னைத்தான் சகஜ புருஷார்த்தி என அனுபவம் ஆகும் மற்றும் சதா சம்பூர்ண தன்மையின் இலட்சியம் சமீபத்தின் அனுபவம் ஆகும்.

பிரம்மா பாபாவுக்கு சமம் என்றால் சம்பூர்ணத்தின் இலக்கை அடைவதாகும். எனவே பிரம்மா பாபா வதனதில் குழந்தைகள் அனைவரையும் சம்பூர்ண அவ்யக்த பரிஸ்தா ஆவதற்கான அழைப்பு செய்து கொண்டேயிருக்கின்றார். பிரம்மா பாபாவின் அழைப்பிற்கான பாடல், அமுத அழைப்பு குரல் கேட்கவில்லையா? வாருங்கள் குழந்தைகளே இனிமையான குழ்நதைகளே, சீக்கிரம் சீக்கிரம் வாருங்கள், இந்த பாடல் மற்றும் சொல் கேட்கின்றதா? பிரம்மா பாபாவின் குரலை கேளுங்கள், அதையே பிடித்துக்கொள்ளுங்கள். பிரம்மா பாபாவும் இதைத்தான் கூறுகின்றார் - குழந்தைகளே 99-ம் ஆண்டு என்னவாகும்

என்ற சிந்தனை அதிகம் செய்கின்றீர்கள். இது ஆகுமா அது ஆகுமா.. ஆகுமா அல்லது ஆகாதா... இந்த யோசனையில் அதிகம் இருக்கின்றார்கள். ஆகுமா ஆகுமா என்ற பாடல் பாடிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் தனது பரிஸ்தா நிலையின், சம்பன்ன சம்பூர்ண நிலையின் தீவிர வேகத்தை அதிகரிக்கும் உயர்ந்த சங்கல்பத்தை குறைவாக செய்கிறீர்கள். ஆகும் ஆகாது என்ற து து என்ற பாடல் அதிகமாக பாடுகிறீர்கள். பாபா கூறுகின்றார் என்னவானாலும் உங்களின் இலட்சியம் என்ன? என்னவானலும் அதை பார்ப்பது மற்றும் கேட்பதற்கான இலட்சியமா அல்லது பிரம்மா பாபா போன்று பரிஸ்தா ஆகவேண்டுமா? அதற்கான ஏற்பாடுகளை செய்து விட்டீர்களா? இயற்கை என்ன தான் தனது தவறான ரூபத்தைக் காட்டினாலும், நீங்கள் பரிஸ்தா வாகி, பாபாவுக்கு சமமான அவ்யக்த ரூபதாரியாகி இயற்கையின் ஒவ்வொரு காட்சியையும் பார்ப்பதற்கு தயாரா? இயற்கையின் குழப்பங்களின் தாக்கத்திலிருந்து விடுபட்டு பரிஸ்தா ஆகி விட்டீர்களா? தனது ஸ்திதியை தயார் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளீர்களா அல்லது என்னவாகும் என்னவாகும் - என்ற இந்த யோசனையிலேயே ஈடுபட்டுள்ளீர்களா? எந்த பிரச்சனை எதிரில் வந்தாலும் இயற்கையின் நாயகர்கள் நீங்கள் தனது இயற்கையின் பதி என்ற சீட்டில் நிலைத்திருக்கீர்களா? அல்லது நிலை தடுமாற்றம் ஏற்படுகின்றதா? இது என்னவாகிறது.... இது என்னவாகிறது ... இது என்னவாகிறது... இந்த பார்வையின் செய்தியிலேயே பிஸியாக இருப்பீர் களா அல்லது முழுமையின் ஸ்திதியில் நிலைத்து, இயற்கையின் குழப்பத்தில் சென்று மேகங்கள் போன்று அனுபவம் செய்வீர்களா?

பிரம்மா பாபா என்னைப்போன்று பரிஸ்தாவாக சதாகாலமும் ஆவீர்களா? என்று குழந்தைகளிடம் கேட்டுக்கொண்டேயிருக்கின்றார். குழந்தைகள் வியக்தத்தில் (தேகம் சம்பந்தமாக) இருந்தாலும் அவ்யக்தம் ஆகவேண்டும். பாபா அவ்யக்தம் ஆகிவிட்டார், நம்மையும் அப்படி அவ்யக்தம் ஆக்கி விடுவார் என்ற நீங்கள் கூறுகிறீர்கள். பிரம்மா பாபா கூறிகின்றார் - தன்னைத்தானே கேளுங்கள், விஷ்வ கல்யாணகாரியின் பொறுப்பு என்ற கிரீடம் பாபா என்ன அணிவித்தாரோ, அதை முழுமை செய்துவிட்டீர்களா? விஷ்வ கல்யாணகாரி, உலக நன்மை முழுமை அடைந்துவிட்டதா? குழந்தைகளுக்கு விஷ்வ கல்யாண காரியத்தை கொடுத்து, பந்தனத்திலிருந்து முக்தியாக்கி சேவையின் வேகத்தை தீவிரம் செய்விப்பதற்கான நிமித்தம் ஆக்கவேண்டியது இருந்தது. எனவே தான் பிரம்மா பாபா அவ்யக்தம் ஆனார். அதற்கான வெளிப்படையான சொரூபத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். அது உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி, அவ்யக்த பிரம்மா மூலமாக தீவிரமாகியுள்ளது, இன்னும் ஆக வேண்டியது இருக்கிறது, சேவையில் தீவிரவேகத்திற்கு நிமித்தமான ஆதாரம் பிரம்மா பாபா ஆகவேண்டியது இருந்தது. ஒரு பிரம்மா பாபா மட்டும் இராஜ்யத்தின் அதிகாரியாக ஆவதில்லை, அவருடன் குழந்தைகளும் இராஜ்ய அதிகாரத்தை அடைய வேண்டும், ஆகையால் சாகாரத்தில் நிமித்தமான குழந்தைகளாகிய உங்களை கருவி களாக ஆக்கினார். இறுதியில், குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் வியக்தத்திலிருந்து அவ்யக்த் பரிஸ்தாவாகி, உலக நலனுக்கான சேவையின் வேகத்தை அதிகப்படுத்தி, நிறைவு மற்றும் முழுமை ஆகவேண்டும் மற்றும் அனைவரையும் தயார் செய்ய வேண்டும்.

பிரம்மா பாபா கூறுகிறார், 99ம் வருடத்தின் சமாப்தி (நிறைவு) வேண்டுமா?

இயற்கைக்கு கைதட்டுவோம், இயற்கை தயாராக உள்ளது. என்ன பரிஸ்தா போன்று நீங்கள் இரட்டை ஒளியாகி (டபுள் லைட்) விட்டீர்களா? குறைந்ததிலும் குறைந்தது 108 பேர் சதா வெற்றி அடைந்துவிட்டீர்களா? எந்த விதமான வீண், எதிர்மறை எண்ணங்களையும், வார்த்தைகளையும் மற்றும் காரியங்கள் அனைத்திலும் சம்பந்தம் தொடர்பில் பாஸ் ஆகிவிட்டீர்களா? வீணானது மற்றும் தீயவை என்ற சுமை சதாகாலத்திற்கு டபுள் லைட் பரிஸ்தா ஆகவிடாது இந்த சுமையிலிருந்து பரிஸ்தா ஆகிவிட்டீர்களா? என்று பிரம்மா பாபா கேட்கின்றார், சதா என்பதில் இரட்டை கோடிடுங்கள். குறைந்தபட்சம் 108 பேர் சதா பரிஸ்தா வாழ்க்கையை அனுபவம் செய்தால், பிரம்மா பாபாவுக்கு சமமாகிவிட்டீர்கள் என்று கூறலாம். எனவே தந்தை கேட்கிறார் - நீங்கள் கைதட்டலாமா? அல்லது 2000, 2001ல் கைதட்டலமா? எப்போது தட்டுவீர்கள்? கைதட்டினால் இப்படி ஆகிவிடலாம் என்று நினைக்கிறீர்களா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் - கைதட்டும் பொழுது தயாராக இருப்பீர்களா? என்ன இருக்கும்? கைதட்டவா? சொல்லுங்கள், நீங்கள் தயாரா? டெஸ்ட் பேப்பர் கொடுக்கலாமா? இதை ஏற்றுக்கொள்வீர்களா, பேப்பரை கொடுக் கலாமா? டீச்சர் எல்லாரும் சொல்லுங்கள் - பேப்பர் கொடுக்கலாமா? அனைத்தையும் விடவேண்டியது வரும். எவரெடி தானே? தயார் என்றால் கை தட்டுங்கள்..

எவரெடி தானே? பேப்பர் எடுக்கலாமா? நாளை அறிவிப்பு செய்யலாமா? எங்கு சென்று விடவேண்டுமோ, அங்கு சென்று சிறிது சரி செய்துவிட்டு வருவோம் என்று அல்ல. எங்கு எப்படியோ அங்கு அப்படி. அப்படிப்பட்ட எவரெடியா? எனக்கு சொந்த அலுவலகம் இல்லை, ஒரு படுக்கை இல்லை, ஒரு அறை இல்லை, ஒரு அலமாரி கூட இல்லை. இப்படிச் சொல்லாதீர்கள் - ஒரு சிறிய பணி உள்ளது, இரண்டே நாளில் செய்துவிட்டு வருகின்றேன். இல்லை. ஆர்டர் என்றால் ஆர்டர் தான். யோசித்து சரி என்று சொல்லுங்கள். இல்லையெனில் நாளை எங்கு செல்ல வேண்டும், எங்கு செல்லக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்படும். வெளியிடலாமா ஆர்டர், தயாரா? அந்தளவு தைரியத்துடன் சரி என்று சொல்லவில்லை. கொஞ்ச நாள் கிடைத்தால் நல்லது என்று நினைத்துக் கொண்டிருக்கின்றீர்கள். நான் இல்லாமல் இது நடக்குமா நடக்காதா என்ற வீணான எண்ணங்கள் கூட வரக்கூடாது. பிரம்மா பாபா இடமாற்றம் செய்யப்பட்டபோது, நான் இல்லாமல் என்ன நடக்கும் என்று நினைத்தாரா என்ன?

நடக்குமா நடக்காதா? போனால் போகட்டும் ஒரு கட்டளை கொடுப்போம், என்ன கட்டளை கொடுத்தாரா? தனது சம்பன்ன மனோநிலையினால் கட்டளை கொடுத்தார், வாயினால் அல்ல, நீங்கள் இப்படி தயாரா? ஆர்டர் கிடைத்து விட்டது, விட்டால் விடும். குழப்பம் ஏற்படுமா? இப்படி செய்ய வேண்டும் - இப்படி கூறுவார்கள். கட்டளை பிறப்பிக்கப்படும், கேட்ட பிறகு ஆர்டர் செய்யப் படமாட்டாது, தேதியை நிர்ணயிக்கப்படமாட்டாது. திடீரென கட்டளை கொடுக்கப்படும் வாருங்கள் என்று, அவ்வளவு தான். இதைத் தான் டபுள் லைட் பரிஸ்தா என்று அழைக்கப்படுகிறது. உத்தரவு இடப்பட்டது மற்றும் நடந்தது. மரணத்திற்கு ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது போல, என்ன நினைப்பீர்கள், சென்டரைப் பாருங்கள், அலமாரியைப் பாருங்கள், மாணவர்களைப் பாருங்கள், பகுதியைப் பாருங்கள்...!

இந்த நாட்களில், எனது ஏரியாவுக்கு இடையே பிரச்சனை அதிகமாகிவிட்டது! எனது ஏரியா, உலக நன்மை செய்பவர்களுக்கு எல்லைக்குட்பட்ட ஏரியா இருக்குமா என்ன?

இதையெல்லாம் விடவேண்டியது வரும். இதுவும் தேக அபிமானமாகும். தேக உணர்வு கூட லேசான விஷயம் தான், ஆனால் தேக அபிமானம் மிகவும் சூட்சுமானதாகும். என்னுடையது, என்னுடையது என்பதைத்தான் தேக அபிமானம் என்று அழைக்கப்படுகிறது. எங்கு எனது இருக்குமோ, அங்கு நிச்சயம் அபிமானம் இருக்கும். தனது சிறப்பியல்புகள் பற்றியதாக இருந்தாலும், எனது விசேஷத்தன்மை, எனது குணம், எனது சேவை, இந்த அனைத்தும்-பிரபுவின் பிரசாதமாகும், என்னுடையது அல்ல. பிரசாத்தை என்னுடையது என்று ஏற்றுக்கொள்வது, தேக அபிமானம். இந்த அபிமானத்தை விடுவது தான் சம்பன்னம் ஆவதாகும். அதனால் தான் நாம் வர்ணனை செய்கின்றோம் - பரிஸ்தா என்றால், தேக அபிமாமனம், தேக உணர்வு, இது போன்ற பல்வேறு வகையான எனது என்ற உறவுகள் எதுவும் இருக்கக்கூடாது, பரிஸ்தா என்றால் எல்லைக்குட் பட்ட உறவுகள் முடிந்துவிட்டன. இப்போது என்ன ஏற்பாடு செய்யவேண்டும்? பிரம்மா பாபாவின் குரலைக் கவனமாகக் கேளுங்கள், அவர் உங்களை அழைக்கிறார். இறுதிக்கான முரசு ஒலிப்பது மிகவும் எளிது என்று தந்தை கூறுகிறார்.

நீங்கள் எப்போது வேண்டுமானாலும் இசைக்கலாம், ஆனால் குறைந்தபட்சம் சத்தியுக அரம்பத்திற் கான 9 லட்சம் தயாராக இருக்க வேண்டும், இல்லையா? வரிசைகிரமமாக இருந்தாலும் சரி, நம்பர் ஒன் ஆனாலும் குறைவாகத்தான் இருப்பார்கள். குறைந்தபட்சம் 108 நம்பர் ஒன்று, 16 ஆயிரம் எண் இரண்டு, 9 லட்சம் எண்கள் மூன்று. ஆனால் இவ்வளவாவது தயாராக இருக்கவேண்டும். தலைநகரமாவது தயாராக இருக்க வேண்டும்.

இப்போது, பாப்தாதா, தற்போது மாயாவின் வடிவம் எதிர்மறையாக இருப்பதையும் மற்றும் பெரும்பான்மை யானவர்கள் வீணான எண்ணங்களைக் கொண்டிருப்பதையும் பார்த்தார். எல்லையற்ற விருத்தியும் (உணர்வு), எல்லையற்ற பார்வையும் மற்றும் எல்லையற்ற ஸ்திதி யையும் எப்பொழுதும் இருப்பது தான் விஷ்வ கல்யாணகாரி என்ற நிலையாகும். மனப்பான்மையில் எந்த ஆத்மாவின் மீதும் சிறிதும் எதிர்மறையான அல்லது வீணான பாவனையும் இருக்கக்கூடாது. எதிர்மறையான விஷயங்களை மாற்றுவது என்பது தனிப்பட்ட விஷயமாகும். ஆனால் எதிர்மறை ஸ்திதியுடையவர்கள், மற்றவர்களின் எதிர்மறையை நேர்மறை யாக மாற்ற முடியாது, எனவே, ஒவ்வொருவரும் தனது விருத்தியையும் பார்வையும் எப்போதும் எல்லையற்றதாக மற்றும் அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறதா? என்பதை சூட்சுமாகச் சோதனையிட வேண்டும். சிறிதேனும் நன்மைக்கான பாவனையைத்தவிர எல்லைக் குட்பட்ட பாவனை, எல்லைக்குட்பட்ட சங்கல்பம், வார்த்தைகளில் சூட்சுமத்திலும் இல்லைதானே? சூட்சமத்திலும் இருந்தால் அதற்கான அடையாளம் காலம் வரும்போது அல்லது பிரச்சனை வரும்போது சூட்சுமம் ஸ்துலத்தில் வந்துவிடும். அது எப்போதும் நன்றாக இருக்கும் ஆனால் அது காலப்போக்கில் வெளிப்பட்டுவிடும். பிறகு இதுவும் அப்படித்தான், இந்த மனிதர்களும் அப்படித்தான். விசயமும் அப்படித்தான் என்று யோசிக்கிறார்கள்.

நபர் இப்படித்தான் ஆனால் எனது ஸ்திதி சுபவானை, எல்லையற்ற பாவனை கொண்டதாக இருக்கின்றதா இல்லையா? தனது தவறை சோதனையிடவும் புரிந்ததா?

விஷயங்களைப் பார்க்காதீர்கள், உங்களைப் பாருங்கள். என்னுடைய ஒவ்வொரு அடியும் பிரம்மாவின் படியாக இருக்க வேண்டும் என்று 99ல் உங்களுக்குள் தாக்கத்தை ஏற்படுத்துங்கள். அனைவருக்கும் பிரம்மா பாபாவிடம் அன்பு உள்ளது தானே? எனவே அன்பானவர்களைத்தான் பின்பற்றப்படுகிறது. தந்தையைப் போல் ஆகியே தீர வேண்டும். சரியா! 99ல் எல்லாம் தயாராகி விடுமா? ஒரு வருடம் உள்ளது. அது முடிந்தது, முடிந்தது... என்று இதைப் பற்றி யோசிக்காதீர்கள். இது நடந்தே தீர வேண்டும். இது நடக்க வேண்டும் என்று எனக்கு முன்பே தெரியும், ஆனால் நான் தந்தையைப் போல ஒரு பரிஸ்தாவாக மாற வேண்டும். புரிந்ததா?. அதை செய்ய வேண்டும் அல்லவா? செய்ய முடியுமா? ஒரு வருடத்தில் அல்லது அரை வருடத்தில் தயாராகுமா? பிரம்மா பாபாவும் தனக்கு சமமாக ஆகும்படி அரைகூவல் விடுகின்றார். இயற்கையும் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கினறது. 6 மாதங்களில் எவரெடியாகுங்கள், 6 மாதங்களில் இல்லையென்றால் குறைந்தது ஒரு வருடத்திலாவது ஆகுங்கள். குழப்பத்தில் வராமல் அசையாத நிலையில் இருங்கள். உங்கள் இலக்கை விட்டுவிடாதீர்கள், நீங்கள் எப்படி இருந்தாலும் தந்தையைப் போல் ஆக வேண்டும். சில பிராமணர்கள் நம்மை அசைத்தாலும், தடையாக முன்வந்தாலும், நாம் சமமாக ஆக வேண்டும். இந்த கருத்து உங்களுக்கு பிடித்தமாக உள்ளதா? (பாப்தாதா அனைவரையும் கைகளை உயர்த்தி அனைவரின் வீடியோவையும் புகைப்படத்தையும் எடுக்கவைத்தார்.) இந்த புகைப்படத்தை அனைவருக்கும் அனுப்புவார்கள். இங்கே வீடியோவில் சில விடுபடலாம். ஆனால் வதனத்தின் வீடியோவில் எதுவும் விடுபடாது.

நல்லது, தந்தை கூறுகிறார், இப்பொழுது ஒரே நொடியில் அனைவரும் விதேஹி ஆக முடியுமா? எனவே, ஒரு வினாடிக்குள், விதேகி ஸ்திதியில் நிலைத்திருங்கள். (டிரில்) நல்லது, இப்போது சரீரத்தில் வாருங்கள். இப்போது மீண்டும் விதேகி ஆகுங்கள். இவ்வாறு நாள் முழுவதும் இடையில் ஒரு நொடி கூட கிடைத்தாலும், இந்த பயிற்சியை இடை இடையே செய்யவும். நல்லது.

சர்வ சிரேஷ்ட பிராமண ஆத்மாக்களுக்கு, எப்போதும் பிரம்மா பாபாவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் கீழ்ப்படிதலுள்ள குழந்தைகளுக்கு, பிரம்மா பாபாவின் போன்று பரிஸ்தா ஸ்திதியில் நிலைத்திருக்கக்கூடிய எப்போதும் அருகாமையில் இருக்கும் ஆத்மாக்களுக்கு, சதா இயற்கையின் எஜமானர்களாக மாறி ஒவ்வொரு காட்சியையும் பார்க்கும் ஆடாத அசைக்க முடியாத ஆத்மாக்களுக்கு. சதா எல்லையற்ற விருத்தி மற்றும் திருஷ்டியில் இருக்கக்கூடிய பாக்கியவான் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு, நினைவு மற்றும் நமஸ்தே. உள்நாட்டிலும் சரி, வெளி நாட்டிலும் சரி, வெளியில் கேட்டுக்கொண்டிருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் விசேஷமான அன்பு நினைவுகள் உரித்தாகுக.

வரதானம் : அழிவற்ற பிராப்திகளின் நினைவினால் தனது சிரேஸ்ட பாக்கியத்தின் குஷியில் இருக்கக்கூடிய ஆசை என்றாலே என்னவென்று தெரியாதவர்கள் ஆகுக,

யாருக்கு தந்தை, பாக்கியவிதாதாவோ அவர்களுக்கு என்ன பாக்கியம் தேவை, பாக்கியம் எனது பிறப்புரிமை என்ற குஷி சதா இருக்கும். ஆகா எனது உயர்ந்த பாக்கியம் மற்றும் பாக்கிய விதாதா பாபா இந்த பாடலை பாடிக்கொண்டே பறந்து கொண்டேயிருங்கள், அனேக ஜென்மம் கூடவே இருக்கும் அப்படிப்பட்ட அழிவற்ற கஜானா கிடைத்து விட்டது. அதை யாரும் அபகரிக்கவே முடியாது, கொள்ளையடிக்கவும் முடியாது. எத்தனை பெரிய பாக்கியம், இதில் எந்த ஆசையும் இல்லை. மனதின் குஷி கிடைத்து விட்டது எனவே அனைத்து பிராப்தியும் கிடைத்து விட்டது. கிடைக்கவில்லை என்ற பொருளே இல்லை. எனவே ஆசை என்றால் என்னவென்று தெரியாதவர் (இச்சாமத்திரம் அவித்தயா) ஆகுங்கள்.

சுலோகன்: விகர்மங்களைச் செய்யும் காலம் கடந்துவிட்டது, இப்போது வீணான எண்ணங்கள், வார்த்தையும் மிகவும் ஏமாற்றத்தை ஏற்படுத்துகிறது.

தகவல்: இன்று, மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை, சர்வதேச யோகா தினம், அனைத்து பிராமணக் குழந்தைகளும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை ஒன்றாக கூடி, ஒருமித்த வடிவத்தில் குறிப்பாக தனது நிராகார சொரூபத்தில் இருந்து, பரந்தாமத்தில் அளவற்ற அமைதி, அன்பு மற்றும் தூய்மையை அனுபவம் செய்ய வேண்டும். உங்கள் மனதையும் புத்தியையும் ஒருமுகப்படுத்தி விதை சொரூப ஸ்திதியின் அனுபவத்தை செய்யவும்.